**செய்தி வெளியீடு எண் : 2145** **நாள் : 27.10.2023**

**பல்வேறு துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமையில் நடைபெற்றது.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் 26.10.2023 அன்று நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்ததாவது:–**

விருதுநகர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், முதல்வரின் முகவரி திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு வழங்குதல், தீர்வு வழங்க எடுத்துக்கொள்ளும் சராசரி கால அளவு, பட்டா மாறுதலுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்கள், அதன் நிலவரங்கள், இ–சேவை மையங்கள் வட்டார அளவில் தற்போது வரை பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள், நிலுவை விவரங்கள், பாலின விகிதம், ஊரக, நகர்ப்புறப் பகுதிகளில் குறைந்த எடையுடன் பிறந்த குழந்தைகள், அரசு மருத்துவமனைகளில் நோய்வாய்ப்பட்டு பிறந்த குழந்தைகள் சேர்க்கை மற்றும் அதற்கான காரணங்கள், கருவுற்ற வளர் இளம் பெண்கள், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு மருத்துவ உதவி, தாய்மார்கள் இறப்பு, அங்கன்வாடி மற்றும் பள்ளிகளில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள், RBSK– திட்டத்தின் கீழ் 7 முக்கிய அறுவை சிகிச்சையின் செயல்திறன், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் நோய் கண்டறியப்படுவதின் செயல்பாடுகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம், நம்மைக் காக்கும்–48, பள்ளிக் கல்வியில் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், உயர்கல்வியில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை, அரசு பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், ஆதிதிராவிட மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் தேர்ச்சி விகிதம், காலாண்டு தேர்ச்சி சதவீதம், வேலைவாய்ப்பு முகாம் அறிக்கை ஆய்வுகளை மேற்கொண்டார்.

மேலும் நான் முதல்வன் திட்டம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்தொகை, ஊட்டசத்து குறைவாக உள்ள குழந்தைகள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள், அங்கன்வாடி உட்கட்டமைப்பு, புதுமைப்பெண் இரண்டாம் கட்டத்திட்டம், நிறுத்தப்பட்ட குழந்தை திருமண தடுப்பு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திட்டங்கள், பேருந்து நிலையங்களின் தற்போதைய நிலை, நகராட்சி சாலைகள், நகராட்சிகளில் மின் மயானம், நகராட்சிகளில் குடிநீர் பணிகள், குடிநீர் விநியோகம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திட்ட அனுமதி, மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டம், முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா

மறுமலர்ச்சித் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்), 15–வது ஒன்றிய நிதிக்குழு பணி முன்னேற்றம், பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், சுய உதவிக்குழுக்களில் உள்ள இலக்குகள் மற்றும் குடும்பங்கள் விவரம், சுய உதவிக்குழுக்களின் கடன் இணைப்புகள், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை நுண்ணீர் பாசன செயல்பாடுகள், வேளாண்மைத்துறை பயிர்சாகுபடி பரப்பு, தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை செயல்பாடுகள், முதலமைச்சரின் தரிசு நிலமேம்பாட்டுத்திட்டம், விதைத் துறை மற்றும் அங்ககச்சான்றுத் துறை, உழவர் சந்தைகளின் செயல்பாடுகள், e–NAM, e–vaadagai, ஆவின் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்திறன், கால்நடைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை தாட்கோ, சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை புதிய தொழில்முனைவோர் மற்றும் நடுத்தர மேம்பாட்டுத்திட்டம் அறிக்கை ஆய்வுகளை மேற்கொண்டார்.

பின்னர், பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான திட்டம், நெடுஞ்சாலைகள் முந்தைய ஆண்டு பணிகள், உள்துறை சாலை பாதுகாப்பு, தற்கொலை இறப்பிற்கான காரணங்கள், போஸ்கோ வழக்குகள், வட்டார போக்குவரத்து அலுவலக செயல்பாடுகள், கூட்டுக்குடிநீர் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஆடை பூங்காவின் தற்போதைய நிலை உட்பட பல்வேறு திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள பணிகள் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள், இலக்கு நிர்ணயம் செய்யப்பட்ட பணிகள், முடிவுற்ற பணிகள், நிலுவையில் உள்ள பணிகள் குறித்தும் துறை வாரியாக ஆய்வு மேற்கொண்டு, நிலுவையில் உள்ள பணிகள் மற்றும் நடைபெற்று வரும் பணிகளை தரமாக விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களை அறிவுறுத்தினார்கள்.

மேலும், மேற்கண்ட திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளில் என்னென்ன சிரமங்கள் உள்ளது என்பது குறித்தும், என்னென்ன திட்டங்களுக்கு நிதி வராமல் நிலுவையில் உள்ளது என்பது குறித்தும், புதிய திட்டங்களுக்கு தேவையான நிதிகள் ஆகியவை குறித்தும் தெரிவிக்கும் பட்சத்தில் அது குறித்து, சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, மாவட்டத்திற்கு தேவையான திட்டங்கள் அனைத்தும் விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அரசு அலுவலர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கி, மாவட்டத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல அனைவரின் ஒத்துழைப்பை நல்குமாறும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், பள்ளிகளில் உடற்கல்வி பாடப்பிரிவு நேரத்தில் பிற பாடங்களை கற்பிக்க அனுமதி அளிக்காமல் மாணவர்களை விளையாட அனுமதி அளிக்க வேண்டும். 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் துணை தேர்விற்கு விண்ணப்பிக்கும் சதவிகிதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பருவத் தேர்வில் மிக குறைந்த மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கு தனிக்கவனம் எடுத்து தேர்ச்சி பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திலும் இ–சேவை மையம் அமைத்து தொடர்ச்சியாக செயல்பாட்டில் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமின் எண்ணிக்கையை கூடுதலாக நடத்த நடவடிக்கை எடுத்து அதன்மூலம் தனியார் துறையில் வேலை நாடுபவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்.

அங்கன்வாடி உட்கட்டமைப்பை சமூக பொறுப்பு நிதி உள்ளிட்ட பிற நிதிகளின் மூலம் மேம்படுத்த வேண்டும். 6 முதல் 12 வகுப்பு வரை அரசு பள்ளியில் பயின்று பிற மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ,

மாணவியர்களை கண்டறிந்து புதுமை பெண் இரண்டாம் கட்டத் திட்டத்தின் கீழ் பயன்பெற செய்ய வேண்டும்.

நகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் சாலை பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சிவகாசி, இராஜபாளையம், காரியாபட்டி மற்றும் விருதுநகர் ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதல் கவனம் செலுத்தி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நிர்ணயித்த இலக்கினை விரைந்து முடிக்க வேண்டும், நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், 15ஆவது ஒன்றிய நிதிக் குழு பணி முன்னேற்றம், உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப் பட்டுவரும் திட்ட பணிகளை குறித்த காலத்திற்குள் தரமுடன் மேற்கொள்ள வேண்டும். பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணை பெறப்பட்டு பணிகள் தொடங்கப்படாமல் இருப்பதற்கான காரணத்தை அறிந்து பயனாளிகள் கட்டடப் பணிகளை மேற்கொள்ள உதவி செய்ய வேண்டும்.

நரிக்குடி, திருச்சுழி, வெம்பக்கோட்டை, மல்லாங்கிணறு, எஸ்.கொடிக்குளம், வ.புதுப்பட்டி உள்ளிட்ட வட்டாரங்களில் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன் இணைப்பை அதிகப்படுத்த கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். செயல்படாமல் உள்ள உழவர் சந்தைகளை செயல்படுத்தவும், செயல்பாட்டில் உள்ள உழவர் சந்தைகளில் கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும். சான்று அளிக்கப்பட்ட விதைகள் வழங்குதல் மற்றும் அங்கக விவசாய பரப்பினை அதிகரிக்க செய்ய வேண்டும். சான்று அளிக்கப்பட்ட நெல் விதைகளின் அளவு குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.தனுஷ்எம்.குமார்(தென்காசி), திரு.கே.நவாஸ்கனி(இராமநாதபுரம்), சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் (விருதுநகர்), திரு.எஸ்.தங்கபாண்டியன்(இராஜபாளையம்), திரு.ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் (சாத்தூர்), சிறப்புத்திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சீனிவாசபெருமாள் அவர்கள் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி. சங்கீதா இன்பம், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in